செ.கு.எண்: 139

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இரங்கல் செய்தி – 10.4.2012**

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில முன்னாள் செயலாளர் திரு. என். வரதராஜன் அவர்கள் உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இன்று காலமானார் என்ற செய்தியறிந்து மிகுந்த வருத்தம் அடைந்தேன்.

திரு. வரதராஜன் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மக்கள் கருத்துகளை அமைதியான முறையில் எடுத்துரைத்து, தன் பணியை செவ்வனே ஆற்றியவர். அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினராகவும், 10 ஆண்டுகள் மாநிலச் செயலாளராகவும் பணியாற்றியவர். அனைவருடனும் எளிமையாகவும், அன்புடனும் பழகி வந்த திரு. வரதராஜன் அவர்களின் மறைவு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினருக்கு பேரிழப்பாகும்.

திரு. வரதராஜன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், கம்யூனிஸ்ட் கட்சியினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்